

# அரசாலும் கைவிடப்பட்ட, தனியார் தோட்டங்களில் சிக்குண்டவர்கள்

**இலங்கையின் மலையகத் தமிழ், தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள்.**

AMNESTY INTERNATIONAL

# நிறைவேற்றுச் சுருக்கம்

ஜனவரி 2024 தொடக்கம் ஜனவரி 2026 வரையான காலப்பகுதியில் சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கையில் முன்னெடுத்த ஆய்வின் அடிப்படையில் இந்த அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தென் மாகாணத்தில் தனியார் தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களில் மலையகத் தமிழ் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் உரிமைத் துஷ்பிரயோகங்களில் இந்த ஆய்வு கவனம் செலுத்தியிருந்தது.

## ஆய்வு முறைமை

2024 ஜனவரி மற்றும் பெப்ரவரி காலப்பகுதியில், இலங்கையின் தென் மாகாணத்தின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள 45 தனியார் தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களுக்கு (இதன் பின்னர் ஒட்டுமொத்தமாக "தோட்டங்கள்" எனக் குறிப்பிடப்படும்) சர்வதேச மன்னிப்புச் சபை கள விஜயங்களை மேற்கொண்டது. கள விஜயங்களுக்கான தோட்டங்களின் தெரிவு, சமூகத்தின் அடிமட்டத்தில் செயற்படும் நிறுவனங்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் மலையகத் தமிழ் சமூக உறுப்பினர்கள் வழங்கிய அறிவுரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது; இலங்கையின் அனைத்து தேயிலைத் தோட்டங்களையும் புள்ளிவிபர ரீதியாக பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என்ற நோக்கம் இங்கு காணப்படவில்லை. தென் மாகாணத்தில் உள்ள இந்த 45 தோட்டங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுடன் 154 நேர்காணல்களை ஆய்வாளர்கள் நடத்தினர். மேலும், இந்தத் தோட்டங்களில் முன்னர் வசித்து, வேலை புரிந்து தற்போது வெளியிடங்களில் உள்ள ஐந்து நபர்களுடனும் நேர்காணல்கள் நடத்தப்பட்டன. நேர்காணல்களுக்கு மேலதிகமாக, 15 கவனக் குழுக் கலந்துரையாடல்கள் 65 தொழிலாளர்களின் பங்கேற்புடன் ஆய்வாளர்களால் நடத்தப்பட்டன. நேர்காணல்களின் நான்கு சிறுவர்களும் (18 வயதுக்கு குறைந்தோர்) உள்ளடங்கியிருந்தனர். நேர்காணல்களில் பங்கேற்றவர்களில், சிங்களவர்கள் என தம்மை அடையாளம் கண்ட மூன்று பேரைத் தவிர ஏனைய அனைவரும் மலையகத் தமிழர்களாக இருந்தனர். அனேகமான நேர்காணல்கள் தோட்டங்களில் பங்கேற்பாளர்களின் நேரடிப் பங்கேற்புடன் நடத்தப்பட்டன. பாதுகாப்புக் காரணங்களுக்காக, தொழிலாளர்கள் மற்றும் தோட்டங்களின் அடையாளங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. இந்த நேர்காணல்களுக்கு மேலதிகமாக, இரண்டு தோட்ட முகாமையாளர்கள், மூன்று மேற்பார்வையாளர்கள், ஒரு நிருவாகி, ஒரு கள உத்தியோகத்தர் மற்றும் இரண்டு தொழிற்சங்கவாதிகளுடனும் ஆய்வாளர்கள் கலந்துரையாடல்களை நடத்தினர். கட்டாய வேலை வாங்கல், கடன்பணி அடிமைத்தனம், வாழ்க்கை மற்றும் பணிச் சூழ்நிலைகளில் ஆய்வுக் கேள்விகள் கவனம் செலுத்தியிருந்தன. கள விஜயங்களின் போது, தோட்டங்களில் காணப்படும் வாழ்க்கை மற்றும் பணிச் சூழ்நிலைகள் தொடர்பான தமது அவதானங்களையும் ஆய்வாளர்கள் பதிவு செய்தனர்.

இந்த ஆய்வின் ஒரு பகுதியாக, தொழிலாளர் திணைக்களம், சம்பளங்கள் சபை, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, மற்றும் சமூக பாதுகாப்புச் சபையின் மாத்தறை மாவட்ட அலுவலகம் என்பவற்றைச் சேர்ந்த அதிகாரிகளுடனும் நேர்காணல்கள் நடத்தப்பட்டன. மேலதிகமாக, தென் மாகாணத்தில் மலையகத் தொழிலாளர்களுடன் நெருக்கமாகப் பணிபுரியும் ஒரு சிவில் சமூக செயற்பாட்டாளர் மற்றும் ஒரு சட்டத்தரணி ஆகியோருடனும் நேர்காணல்கள் நடத்தப்பட்டன.

## பின்னணி

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டங்களில் பிரித்தானிய காலநித்துவக்காரர்களால் இலங்கையில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவின் தெற்குப் பிரதேசத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களின் சந்ததிகளே மலையகத் தமிழர்களாகும். இலங்கையில் அதிக பாரபட்சம் மற்றும் மறுப்புகளுக்கு உள்ளாக்கப்பட்ட சமூகங்களில் ஒன்றாக இச்சமூகம் உள்ளது. இலங்கை அரசாங்கங்கள் வரலாற்று ரீதியாக முன்னெடுத்த பிரஜாவுரிமை மறுப்பில் இருந்து மலையகத் தமிழர்களை ஓரங்கட்டும் செயன்முறை ஆரம்பமானது. வழித்தோன்றல் அடிப்படையிலான குடியுரிமைக்கான விபரக் குறிப்புகளை உருவாக்கிய, 1948 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டமும் இதில் உள்ளடங்குகிறது. "இந்திய வழித்தோன்றலைக் கொண்ட நபர்களுக்கு" பிரஜாவுரிமை வழங்கியதன் மூலம் இந்த நிலை இறுதியாக 2003 ஆம் ஆண்டு தீர்த்துவைக்கப்பட்டது. எனினும், பல தசாப்தங்களாகத் தொடர்ந்த குடியுரிமை மறுப்பு, நாடற்றவர்கள் என்ற நிலை மற்றும் நில உரிமத்துவத்துக்கான தடைகள் என்பன நிலைத்து நிற்கும் பின் விளைவுகளை இந்தச் சமூகத்தில் பல தலைமுறைகளாக ஏற்படுத்தியுள்ளன.

தமது வழித்தோன்றலின் அடிப்படையில் முறைமைப்படுத்தப்பட்ட பாரபட்சத்தை மலையகத் தமிழ்ச் சமூகம் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றது. இது தொழிலாளர் சுரண்டலால் அவர்கள் பாதிக்கப்படும் நிலைக்கு நேரடியாக பங்களிப்பு வழங்குகின்றது. தொடர்ச்சியாக இடம்பெறும் முறைமைப்படுத்தப்பட்ட புறக்கணிப்பினால் இச்சமூகம் பாதிப்படைகின்றது, குறிப்பாக சுகாதாரப் பராமரிப்பு போன்ற அரச சேவைகளை அணுகுவதில் இந்நிலை தொடர்கின்றது. இதன் விளைவுகளில் ஒன்றாக, இந்தச் சமூகம் தனிமைப்படுத்தப்பட்டுக் காணப்படுவதுடன், தமது தொழில் தருநர்களில் அதிகமாக தங்கியிருக்கும் நிலைக்கு அச்சமூகத்தைத் தள்ளியுள்ளது. வாழ்வாதாரம் மற்றும் வதிவிடம் என்பவற்றில் மாத்திரமன்றி நலன்புரி அம்சங்களிலும் இந்த நிலை காணப்படுகின்றது.

இலங்கையின் ஏற்றுமதி வருமானமீட்டலில் தேயிலை ஏற்றுமதி இரண்டாவது இடத்தில் உள்ள போதும், தேயிலை உற்பத்தியின் முதுகெலும்பாகக் காணப்படும் மலையக தமிழ்த் தொழிலாளர்களை இந்த ஏற்றுமதி வருமான நன்மைகள் சென்றடைவதில்லை. இலங்கையில், பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் அரச கூட்டுத்தாபணங்கள் முகாமைத்துவம் செய்யும் பெருந்தோட்டங்கள் போன்று தனியாருக்குச் சொந்தமான சிறு தோட்டங்களிலும் தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றது, அவ்வாறான சிறு தோட்டங்கள் மீதே இந்த ஆய்வு கவனம் செலுத்துகின்றது.

## சட்டத்தின் கட்டமைப்பு

இலங்கை அனைத்து அடிப்படை சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களையும் ஏற்றுறுதி செய்துள்ளதுடன் சர்வதேச தொழிலாளர் அமைப்பில் (ILO) 1948 ஆம் ஆண்டு தொடக்கம் அங்கம் வகித்து வருகின்றது, மேலும் 44 ILO சமவாயங்களையும் ஏற்றுறுதி செய்துள்ளது. இதன் பொருள், மலையகத் தமிழர்களின் தொழில் தருநர்கள் உள்ளடங்கலாக தனிப்பட்ட நபர்கள் மற்றும் அரசு அல்லாத செயற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் பாரபட்சம் மற்றும் மனித உரிமைத் துஷ்பிரயோகங்களில் இருந்து மலையகத் தமிழ்த் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் தெளிவான கடப்பாடு இலங்கைக்கு உள்ளது என்பதாகும்.

சமத்துவமாக நடத்தப்படல் மற்றும் பாரபட்சத்துக்கு ஆளாகாமல் இருத்தல் என்பவற்றுக்கான உரிமைகள் உள்ளடங்கலாக, பேச்சு, ஒன்றுகூடுதல், ஒருங்கிணைதல், தொழில் மற்றும் நகர்வு என்பவற்றுக்கான சுதந்திரங்களை அனைத்துக் குடிமக்களுக்கும் இலங்கையின் அரசியலமைப்பு உத்தரவாதப்படுத்துகின்றது. இந்த நாட்டின் பொதுவான தொழிலாளர் சட்டங்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஓரளவு பாதுகாப்பை வழங்குகின்றன, எனினும் சம்பளம், பணிச் சூழ்நிலைகள், தொழில் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு என்பன தொடர்பில் பெருந்தோட்டங்களுக்கு தனித்துவம் மிக்க வகையில் வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு தொடர்பில் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் காணப்படுகின்றன. தொழிலாளர் சட்ட மீறல்கள் மற்றும் குற்றச் செயல்களை நிவர்த்தி செய்வதற்கான சிறந்த சட்டக் கட்டமைப்பு மற்றும் குற்ற நீதி முறைமை என்பன கோட்பாட்டு ரீதியாகக் காணப்படுகின்றன, எனினும் கட்டமைப்பு ரீதியான சமத்துவமின்மை மற்றும் சுரண்டல் தன்மை தொழிலாளர் முறைமைகள் என்பவற்றின் சூழமைவில் இந்த நீதி முறைமையை பெருந்தோட்ட தொழிலாளர்கள் அணுகுவது மிகவும் சவால் மிக்கதாக அமைந்துள்ளது.

## கட்டாய வேலை வாங்கல்

கட்டாய வேலை வாங்கல் தொடர்பான துஷ்பிரயோகங்கள் உள்ளடங்கலாக, பல மனித உரிமைத் துஷ்பிரயோகங்களை மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் அனுபவிப்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. இது சர்வதேச சட்டங்களின் கீழ் இலங்கை கொண்டுள்ள கடப்பாடுகளுடன் பொருந்தாத விடயமாகக் காணப்படுகின்றது. கட்டாய வேலை வாங்கலை "ஏதாவது தண்டனை அச்சுறுத்தலின் கீழ் பெற்றுக்கொள்ளப்படுவது" என ILO ஒப்பந்தங்கள் வரையறுக்கின்றன, இங்கு தொழிலாளர் "தன்னை தன்னார்வமாக வழங்குவதில்லை". கட்டாய வேலை வாங்கலுக்கான தனித்துவம் மிக்க குறிகாட்டிகளை ILO அடையாளம் கண்டுள்ளது. இவற்றில் பாதிப்புறும் நிலையை துஷ்பிரயோகம் செய்தல், மிரட்டல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள், உடலியல் மற்றும் பாலியல் வன்முறை, கடன்பணி அடிமைத்துவம், நகர்வுகளைக் கட்டுப்படுத்தல், அத்துடன் துஷ்பிரயோகம் மிக்க பணி மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகள் என்பன உள்ளடங்குகின்றன. இந்த ஆய்வில் பெறப்பட்ட மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் அனுபவங்களில் இந்தக் குறிகாட்டிகள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கட்டாய வேலை வாங்கல் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கும் அவற்றுக்கான தண்டனைகள் வழங்கப்படுவதற்கும் வினைத்திறன் மிக்க படிநிலைகளை முன்னெடுக்கும் பொறுப்பு ILO உறுப்பு நாடுகளுக்கு உள்ளது.

பாதிப்புறும் நிலையைத் துஷ்பிரயோகம் செய்வது கட்டாய வேலை வாங்கலின் ஒரு முக்கிய குறிகாட்டியாகும். மலையகத் தமிழ்ச் சமூகம் தனது வழித்தோன்றல், இனம், சாதி மற்றும் மொழி என்பவற்றின் அடிப்படையில் வரலாற்று ரீதியாக முறைமையான மற்றும் கட்டமைக்கப்பட்ட இனப் பாரபட்சத்தை நீண்ட காலமாக அனுபவித்து

வருகின்றது, இது கட்டாய வேலை வாங்கலால் அவர்கள் பாதிக்கப்படும் நிலையை உருவாக்கியுள்ளது. சாதி அடிப்படையில் அமைந்த பாரபட்சம் உள்ளடங்கலாக மலையகத் தமிழர் அடையாளத்துடன் இணைந்துள்ள பாதிப்புறும் தன்மைகளைப் பயன்படுத்தி இந்த தொழிலாளர்களை கட்டாய வேலை வாங்கலுக்கு உட்படுத்த, தனியார் தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தேயிலைத் தோட்டங்களின் தொழில் தருநர்கள் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்கின்றனர் என்பதை சர்வதேச மன்னிப்புச் சபையின் விசாரணைகள் காண்பிக்கின்றன.

முறைமை மூலம் உருவாக்கப்பட்டுள்ள, காணியற்றவர்கள் என்ற நிலை மலையகத் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் பாதிப்புகள் மற்றும் சவால்களின் தீவிரத்தை மேலும் அதிகரிக்கின்றது. காணியற்றவர்கள் என்பது அவர்களால் சொந்தமாக நிலத்தை அல்லது நில உரித்து ஆவணத்தைக் கொண்டிருக்க முடியாத நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. தொழிலாளர்களின் வீட்டு வசதி தனியார் தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களில் அவர்கள் செய்யும் வேலையுடன் இணைக்கப்பட்டிருப்பதை இந்த ஆய்வு வெளிக்கொணர்கிறது. இவ்வாறு வேலை மட்டுமன்றி வதிவிடத்துக்காகவும் முகாமைத்துவத்தில் தங்கியிருக்கும் நிலை, துஷ்பிரயோகம் மற்றும் கட்டாய வேலை என்பவற்றால் அவர்கள் பாதிப்புறும் தன்மையை மேலும் அதிகரிக்கின்றது. கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட அனைத்து 45 தோட்டங்களிலும், வீட்டு வசதிக்காக தமது தொழில் தருநர்களில் தாம் தங்கியிருப்பதாக தொழிலாளர்கள் கூறினர். பலவந்தமாக வெளியேற்றப்படல் பற்றிய அச்சம் மற்றும் பொறியில் மாட்டிக்கொண்ட ஒரு உணர்வு என்பன தொழிலாளர்களை பாதிப்புறும் நிலைக்குத் தள்ளியுள்ளதுடன் தமது மோசமான பணிச்சூழல் மற்றும் வாழ்க்கை நிலைகளை சவாலுக்கு உட்படுத்த முடியாதவர்களாகவும் ஆக்கியுள்ளது.

உடலியல் மற்றும் பாலியல் ரீதியான வன்முறை கட்டாய வேலை வாங்கலின் இன்னொரு முக்கிய குறிகாட்டியாகக் காணப்படுகின்றது. தோட்ட முகாமைத்துவத்தால் தாம் வாய்மொழி அல்லது/அத்துடன் உடலியல் ரீதியான துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டதாக அல்லது அவ்வாறான சம்பவங்களை நேரில் கண்டதாக 15 தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் சர்வதேச மன்னிப்புச் சபையிடம் தெரிவித்தனர். இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதற்கான காரணங்களில் தோட்டத்தைக் குறைகூறுதல், வேலைக்கு சமூகமளிக்காதிருத்தல், நேரம் பிந்துதல் மற்றும் வழங்கப்படாத சம்பளம் தொடர்பில் கேள்விகளை எழுப்புதல் என்பனவும் உள்ளடங்குகின்றன. மிரட்டலுக்கான ஒரு உத்தியாக உடலியல் வன்முறை பற்றிய அச்சுறுத்தல் பயன்படுத்தப்படுவதும் குறிப்பிடப்பட்டது. மேலும், பாலியல் துஷ்பிரயோக அனுபவங்கள் பற்றியும் தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.

மலையக தமிழ்த் தொழிலாளர்கள் வறுமையில் வாழ்கின்றனர். இது கடன்பணி அடிமைத்துவம் மற்றும் வீட்டு வசதி, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்காக தனியார் மற்றும் சிறு தோட்டங்களில் தங்கியிருத்தல் உள்ளடங்கலாக பொருளாதார ரீதியாக பாதிப்புறும் தன்மைகளையும் ஏற்படுத்துகிறது. கடன்பணி அடிமைத்துவம் கட்டாய வேலை வாங்கலின் ஒரு வடிவமாகவும் அதன் குறிகாட்டியாகவும் அமைந்துள்ளது. தொழிலாளர்கள் ஒரு தொழில் தருநரிடம் வரையறையற்ற காலத்துக்கு கட்டுண்டு இருக்கும் நிலையை கடன்பணி அடிமைத்துவம் ஏற்படுத்த முடியும், இந்தக் காலப்பகுதி தலைமுறைகளாகக் கூடத் தொடர முடியும். யதார்த்தமற்ற கொழுந்து அறுவடை இலக்குகள் மற்றும் ஊதியத்தில் மேற்கொள்ளப்படும் கழிப்புகள் பற்றிய வெளிப்படைத்தன்மை இன்மை உள்ளடங்கலாக பல உத்திகளைப் பயன்படுத்தி தொழிலாளர்கள் தமது ஆகக் குறைந்த தினக் கூலியைப் பெற்றுக் கொள்வதை தோட்ட முகாமைத்துவங்கள் தடுக்கின்றன. உணவு மற்றும் மருந்துகள் உள்ளிட்ட நாளாந்த அடிப்படைச் செலவுகளை சமாளிக்க தொழிலாளர்கள் சம்பள முன்பணம் மற்றும் கடன்களில் தங்கியிருக்கும் நிலையை தோட்ட முகாமைத்துவங்கள் ஏற்படுத்துவதை இந்த ஆய்வு வெளிக்கொணர்ந்துள்ளது. ஆகக் குறைந்த நாட் சம்பளத்தைப் பிடித்து வைத்தல், சட்டவிரோதமான சம்பளக் கழிப்புகள், வரையறுக்கப்படாத கடன் மீளச் செலுத்தல் நியதிகள் மற்றும் அதிகரிக்கப்பட்ட சில்லறைப் பொருட்களுக்கான விலை என்பன காரணமாக தொழிலாளர்கள் தொழில் தருனர்களுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை முடிவற்ற விதத்தில் அதிகரித்துச் செல்வதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. இது தொழிலாளர்களை தனியார் தேயிலை தோட்ட உரிமையாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றது. சில வேளைகளில், இந்தக் கட்டுப்பாடு பல தலைமுறைகளாகத் தொடர்கின்றது, இது கடன்பணி அடிமைத்தன நிலையை ஏற்படுத்துகிறது.

தோட்ட முகாமைத்துவத்தால் தமது நடமாடும் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதை குறைந்தது 22 தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் விபரித்தனர். ஒரு தோட்டத்தில் இருந்து இன்னொரு தோட்டத்துக்கு செல்வதற்கான தடை, ஒரு குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் தோட்டத்தில் இருந்து வெளியே செல்ல இயலாத நிலை, தனிப்பட்ட வேலைகளைச் செய்ய முடியாது இருத்தல், அனுமதி இல்லாமல் பயணம் செய்ய முடியாது இருத்தல், அனைத்து குடும்ப உறுப்பினர்களுடனும் இணைந்து பயணம் செய்ய முடியாது இருத்தல், பயண நேரம் தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் தாம் செல்லும் இடத்தை முகாமைத்துவத்துக்கு அறிவிக்க வேண்டிய நிலை என பல

வடிவங்களில் இந்த நடமாட்டம் மீதான தடைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சுதந்திரமான நடமாட்டத்தின் மீது விதிக்கப்படும் இவ்வாறான தடைகள் தொழிலாளர்கள் தமது ஏனைய மனித உரிமைகளை அனுபவிப்பதிலும் தாக்கங்களை ஏற்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, எதேச்சையான தலையீடுகள் இல்லாத குடும்ப வாழ்வுக்கான உரிமை மற்றும் கல்விக்கான உரிமை போன்றன இதன் மூலம் பாதிக்கப்படலாம். முழுக்குடும்பமும் வெளியேறிவிடும் என்ற அச்சத்தால், ஒரு குடும்ப உறுப்பினர் தோட்டத்தில் தங்கியிருப்பதை எவ்வாறு தோட்டங்கள் தேவைப்படுத்துகின்றன என்பதை தொழிலாளர்கள் விபரித்தனர். தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு அனுமதி மறுக்கப்படுவதாகவும் பெற்றோர் தெரிவித்தனர்.

துஷ்பிரயோகம் மிக்க வேலை மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகளையும் மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தனர். கட்டாய வேலை வாங்கலுக்கான இன்னொரு குறிகாட்டியாக இது அமைகின்றது. இலங்கையில் தேயிலைப் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தீங்கு மிக்க பணிச் சூழ்நிலைகளை எதிர்கொள்கினர் என ஏற்கனவே காணப்படும் ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன, இதனை இந்த ஆய்வும் மீளுறுதி செய்கின்றன. தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படாமை மற்றும் பணியின் போது தமக்கு ஏற்பட்ட காயங்கள் என்பவற்றை நேர்காணல்களில் கலந்து கொண்டவர்கள் விபரித்தனர். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புக் கரிசனைகளைக் குறிப்பான இலக்காகக் கொண்ட தேசிய சட்டவாக்கங்கள் அல்லது கொள்கைகள் எவையும் தற்போது காணப்படவில்லை. மேலும், மலையகத் தமிழ் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகள் போதுமான வீட்டு வசதிக்கான உரிமையை அடைந்து கொள்வதற்கு அவசியமான முக்கிய கூறுகளைப் பூர்த்தி செய்யத் தவறியவனவாகக் காணப்படுகின்றன. வசிக்கும் காலத்துக்கான உத்தரவாதம் காணப்படாத அதே வேளை, தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வதிவிடங்கள் போதிய இடவசதி, காலநிலையைத் தாங்கும் உட்கட்டமைப்பு மற்றும் போதிய சுத்த வசதிகள் அற்றனவாகக் காணப்படுகின்றன.

## சமூகப் பாதுகாப்புக்கான உரிமை

சமூகப் பாதுகாப்பு நன்மைகளுக்கான மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் அணுகலில் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் காணப்படுவதை சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. இது இலங்கையின் மனித உரிமைக் கடப்பாடுகளுக்கு முரணானதாகக் காணப்படுகின்றது. குறித்த கடப்பாடுகளின் கீழ், சமூகப் பாதுகாப்புக்கான உரிமையை மதிக்கும், பாதுகாக்கும் மற்றும் நிறைவேற்றும் கடமையினை அரசாங்கங்கள் கொண்டுள்ளன. மேலும், அனைத்து சமூகங்களும் இந்த உரிமையை அனுபவிப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கடமையும் இதில் உள்ளடங்குகின்றது. பிரசவ கால நன்மைகள், ஓய்வூதியம் அல்லது சுகயீன விடுமுறைக்கான அணுகல் தமக்கு இல்லை என தொழிலாளர்கள் குறிப்பிட்டனர். தனியார் தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தோட்ட உரிமையாளர்கள் வேண்டுமென்றே மலையகத் தமிழ்த் தொழிலாளர்களை "அமயத் தொழிலாளர்கள்" (Casual Workers) என வகைப்படுத்துகின்றனர். இது தொழிலாளர் தொடர்பான அனைத்து சட்ட ரீதியான உரித்துகள் மற்றும் அடிப்படை நன்மைகளை மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் அடைந்து கொள்வதைத் தடுக்கின்றது. ஒரு தொழில் தருநர் தொழிலாளரைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் வேளை (மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் இவ்வாறு நடத்தப்படுவது தெளிவானதாகும்) அவ்வாறான நபர்கள் சுயாதீனமான ஒப்பந்தகாரர்களாக நடத்தப்பட முடியாது என்பதை இலங்கையின் மீயுயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன மீளுறுதி செய்துள்ளன. மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் சுரண்டல் மிக்க வகையில் "அமயத்" தொழிலாளர்கள் என தவறாக வகைப்படுத்தப்படுவது, ஏனைய இழப்புகளுக்கு மத்தியில், மகப்பேறு நன்மைகளை பெண் தொழிலாளர்கள் இழப்பதற்கும் ஏதுவாக அமைகின்றது.

இலங்கையில், தொழிலாளர்கள் ஓய்வு பெற்ற பின்னர் அவர்களுக்கு நன்மையளிக்கும் இலங்கையின் சமூகப் பாதுகாப்பு முறையின் ஒரு பகுதியாக, ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) என்பவற்றுக்கு தொழில் வழங்குனர்கள் பங்களிப்பு வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளுக்கான அணுகல் மறுக்கப்படுவதை இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. EPF மற்றும் ETF என்பவற்றுக்கு தமது தொழிலாளர்களை தொழில் வழங்குநர்கள் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறான நன்மைகளை அடைய தாம் பதிவு செய்யப்படவில்லை அல்லது தாம் பதிவு செய்யப்பட்டுள்ளோமா என நிச்சயமாகத் தெரியாது என தொழிலாளர்கள் குறிப்பிட்டனர். தொழிலாளர்கள் சார்பில் இந்த பங்களிப்புகள் (மற்றும் இதனுடன் தொடர்புடைய சம்பளக் கழிப்புகள்) வெளிப்படைத்தன்மை மிக்க பதிவுகள் தொழிலாளர்களிடம் காணப்படவில்லை. இதன் காரணமாக, ஓய்வு நிலையை அடையும் வேளை தமது ஓய்வூதியத்தைப் அவர்களால் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. சம்பளத்துடன் கூடிய சுகயீன விடுமுறைக்கான அணுகலை மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் கொண்டிருக்கவில்லை என்பதையும் இந்த ஆய்வு

சுட்டிக்காட்டுகின்றது. சுகயீனமான நிலையிலும் தாம் வேலையைத் தொடர வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதாக தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.

தொழிற் சங்கங்களுக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் அணுகல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகிறது அனேகமான சந்தர்ப்பங்களில் இந்த அணுகல் காணப்படுவதில்லை அல்லது தொழில் வழங்குநர்களால் முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளதை சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்த ஆய்வு வெளிப்படுத்துகின்றது. இலங்கையின் அரசியலமைப்பு, தேசிய சட்டவாக்கம் மற்றும் சர்வதேச கடப்பாடுகளின் கீழ், தொழிற் சங்கங்களில் இணைவதை மற்றும் அவற்றை உருவாக்குவதைத் தடுத்தல் சட்டவிரோதமானதாகும். இந்த ஆய்வுக்காக கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட தோட்டங்கள் தொழிற் சங்கம் பற்றிய எண்ணக்கரு தொடர்பில் விரோதமான மனப்பாங்கைக் கொண்டனவாகக் காணப்பட்டதுடன் அவற்றில் தொழிற் சங்கங்கள் செயற்படாத நிலையே காணப்பட்டது. தொழிற் சங்கங்கள் இல்லாத நிலை மற்றும் மலையகத் தமிழ் தொழிலாளர்கள் அனுபவிக்கும் உரிமைத் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பு என்பவற்றுக்கு இடையே ஒரு நேர்மறையான தொடர்பு காணப்படுகின்றது தான் உணர்வதாக சர்வதேச மன்னிப்புச் சபையிடம் ஒரு தொழிற் சங்கவாதி தெரிவித்தார்.

## தொழிலாளர் சோதனைகள் மற்றும் கண்காணிப்பு

மாத்தறை மற்றும் காலி மாவட்ட தேயிலைத் தோட்டங்களில், தொழிலாளர் சோதனைகள் மற்றும் தொழில் நியமங்களின் அமுல்படுத்தல் என்பவற்றில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் காணப்படுவதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. வேலை நேரங்கள், கொடுப்பனவுகள், நன்மைகள் மற்றும் பணிச் சூழ்நிலைகள் என்பவற்றில் கவனம் செலுத்தும் சோதனைகளின் ஊடாக இலங்கையில் தொழிலாளர் சட்டங்களை அமுல்படுத்துவதற்கான பொறுப்பு தொழில் அமைச்சின் கீழ் செயற்படும் தொழில் திணைக்களத்துக்கு உள்ளது. வழமையான சோதனைகள் நடத்தப்படுவதாக தொழில் திணைக்களம் ஆய்வாளர்களிடம் தெரிவித்தது, எனினும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொடர்பில் ஆவணங்கள் காணப்படாமை மற்றும் மொழித்தடை என்பன தனித்துவம் மிக்க சவால்களாகக் காணப்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டது. அதிகாரிகள் அரிதாகவே பெருந்தோட்டங்களுக்கு வருகை தருவதாகவும் தமது மனக்குறைகள் தீர்க்கப்படாமலேயே உள்ளதாகவும் தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.

## நீதிக்கான அணுகல்

இலங்கையில் வினைத்திறனான சட்டக் கட்டமைப்பு காணப்பட்ட போதும், நீதியை அணுகுதல் மற்றும் தமக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் அல்லது மோசமான பணிச் சூழ்நிலைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றில் மலையகத் தமிழ்த் தொழிலாளர் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். மொழி, புவியியல் அமைவிடத் தூரம், சம்பளம் வெட்டப்படல் காரணமாக முறைப்பாடுகளைப் பின் தொடர்வதற்கு வேலையின் போது நேரம் எடுத்துக்கொள்ள முடியாத நிலை, பொலிசார் உள்ளடங்கலாக அரச அதிகாரிகளால் பாரபட்சமாக மற்றும் முற்கற்பித மனநிலையில் நடத்தப்படல், அத்துடன் வேலை தொடர்பான ஆவணங்கள் உள்ளடங்கலாக ஆவணங்களுக்கு அணுகல் இல்லாமல் இருத்தல் என்பன இச்சவால்களில் உள்ளடங்குகின்றன. இந்த முறைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு அவசியமான அதிகாரத்தில் பெரும்பகுதி பொலிசாரிடம் உள்ளதாகத் தெரிகிறது, எனினும் தீர்வுகளைத் தேடும் மலையகத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு ஆதரவு வழங்காதவர்களாகவும் அவர்களுடனான ஈடுபாடுகளின் போது முற்கற்பிதம் மிக்க மனநிலையில் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டது. தொடர்ந்து நிலைத்திருக்கும் ஓரங்கட்டல் மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட பாரபட்சம் என்பன தொழிலாளர்கள் பொலிஸ், தொழில் திணைக்களம், தொழில் நியாய சபை மற்றும் மத்தியஸ்தம் என்பவற்றை அணுகுவதற்கு தடையாக உள்ளது. இதன் காரணமாக, தனியார் தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களில் தொடரும் கட்டாய வேலை வாங்கல் மற்றும் நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகளுக்கு வினைத்திறன் மிக்க தீர்வுகளை அவர்களால் பெற முடியாமல் உள்ளது.

## முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்

இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள தனியார் தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களில் மலையகத் தமிழ்ச் சமூகத்தின் உரிமைகள் எந்த அளவுக்கு நசுக்கப்படுகின்றன என்பதை சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக, கட்டாய வேலை வாங்கல் தொடர்பான பல குறிகாட்டிகள் காணப்படுவது தொடர்பில் இந்த ஆய்வு கவலைகளை எழுப்புகின்றது. சமூகப் பாதுகாப்புக்கான உரிமை, ஒருங்கிணைவதற்கான சுதந்திரம் என்பவற்றைப் பாதுகாத்தல் அத்துடன் நீதிக்கான அணுகலை வழங்குதல், மற்றும் போதிய அளவான தொழிலாளர் சோதனைகள் அத்துடன் கண்காணிப்பை உறுதி செய்தல் போன்ற விடயங்களில் அரசாங்கத்தின் தோல்விகளையும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. இந்த ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில், சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்துக்கு

பரிந்துரைகளை முன் வைக்கின்றது, இப்பரிந்துரைகளின் முழுமையான பட்டியல் இந்த அறிக்கையின் இறுதிப் பகுதியில் உள்ளது. பரிந்துரைகளின் பட்டியலில் பின்வருவனவும் உள்ளடங்கியுள்ளன:

- தனியார் தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களில் நிலவும் தொழிலாளர் உரிமைகள் மீதான துஷ்பிரயோகங்களின் தன்மை மற்றும் அளவைத் தீர்மானிப்பதற்கு ஒரு இலக்கு வைக்கப்பட்ட விசேட தொழிலாளர் சோதனை உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.
- விசாரணைகள், குற்றவியல் நடவடிக்கைகள் மற்றும் பொருத்தமான சிவில் சட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரளிக்கப்பட வேண்டும். மேலும், சட்டத்தால் விதிக்கப்படும் தண்டனைகள் கண்டிப்பாக அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- போதுமான வீட்டு வசதி உள்ளடங்கலாக சமூக-பொருளாதார உரிமைகளை மலையக தமிழ்ச் சமூகம் அனுகுவதில் காணப்படும் தடைகளை அடையாளம் காணவும் அத்தடைகளை நிவர்த்தி செய்வதிலும் தொடர்புடைய அரச அதிகாரசபைகள் முன்யோசனை மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது உறுதி செய்யப்பட வேண்டும்.

# முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்

இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள தனியார் தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களில் மலையக தமிழ் சமூகத்தின் உரிமைகள் எந்த அளவுக்கு மீறப்பட்டுள்ளன என்பதை சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. குறிப்பாக, கட்டாய வேலை வாங்கலுக்கான குறிகாட்டிகள் அங்கு காணப்படுவது தொடர்பில் குறித்த ஆய்வு கரிசனைகளை எழுப்பியுள்ளது. சமூகப் பாதுகாப்புக்கான உரிமை, ஒருங்கிணைவதற்கான சுதந்திரம் மற்றும் நீதிக்கான அணுகல் என்பவற்றைப் பாதுகாப்பதில் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதில் அரசாங்கம் அடைந்துள்ள தோல்விகளை இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. மேலும், போதிய அளவான தொழிலாளர் கண்காணிப்பு மற்றும் சோதனைகள் முன்னெடுக்கப்படாமல் இருப்பதையும் இந்த ஆய்வு வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது.

மலையகத் தமிழர் என்ற அடையாளத்தின் அடிப்படையில் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சாதி அடிப்படையிலான மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு படும் பாரபட்சங்களை இந்த அறிக்கை ஆராய்கின்றது. இந்த பாரபட்சங்கள் வருமான நிலை, வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட வீட்டு வசதி, மட்டுப்படுத்தப்பட்ட கல்வியறிவு, மற்றும் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் கடன் என்பவற்றை ஏற்படுத்துகின்றன. இந்த பாரபட்சம் அம்மக்களின் பாதிப்புறும் நிலையை உயர்த்தியுள்ளது. தொழில் தருநர்கள் அம்மக்களின் பாதிப்புறும் நிலையைப் பயன்படுத்தி அவர்களை கட்டாய வேலை வாங்கப்படும் நிலைக்குள் கொண்டு செல்கின்றனர். தோட்ட நிருவாகத்தால் இம்மக்கள் வாய்மொழி, உடலியல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். சட்டவிரோத சம்பளக் கழிப்புகள், வரையறுக்கப்படாத மீளச் செலுத்தல் நியதிகள், அதிகரிக்கப்பட்ட உணவு விலைகளால் தேக்கமடையும் கடன் என்பவற்றால் இம்மக்கள் கடன் சுழற்சிகளுக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர். இதன் காரணமாக, தொழிலாளர்கள் ஒரு தொழில் தருனருக்கு கட்டுப்பட்டவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இது கடன்பணி அடிமைத்துவத்திற்கு ஒப்பான ஒரு நிலையை உருவாக்கியுள்ளது. தோட்டங்களின் எல்லைகளுக்கு வெளியே நடமாடுவதில் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் தோட்ட முகாமைத்துவங்கள் தொழிலாளர்களின் நடமாடும் சுதந்திரத்தின் மீது தடைகளை ஏற்படுத்துகின்றன.

மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் தமது தொழில் தருநர்களால் எவ்வாறு தொடர்ச்சியாக அமயத் தொழிலாளர்களாக ஆக்கப்படுகின்றது என்பதையும் இந்த அறிக்கை விளக்குகிறது. இலங்கையின் தொழில் சட்டங்களால் தொழிலாளர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நன்மைகளை அவர்கள் பெற்றுக்கொள்வதை தொழில் தருநர்களின் இந்த செயற்பாடு தடுக்கின்றது. தொழில் நிலைக்கான வரம்புகளை இந்தத் தொழிலாளர்கள் பூர்த்தி செய்வது தெளிவாகத் தெரிகின்றது. இருப்பினும், மகப்பேற்றுக் கொடுப்பனவுகள், ஓய்வூதியப் பங்களிப்பு, மற்றும் நோய் நிலை நன்மைகள் போன்ற சமூகப் பாதுகாப்பு நன்மைகள் இந்தத் தொழிலாளர்களுக்கு அடிக்கடி மறுக்கப்படுகின்றன.

மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் அமைந்துள்ள தோட்டங்களில் மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் அனுபவிக்கும் தீவிரமான துஷ்பிரயோகங்கள் மற்றும் மோசமான பணிச் சூழ்நிலைகளை ஆய்வு நேர்காணல்களில் பெறப்பட்ட வாக்குமூலங்கள் சுட்டிக்காட்டுகின்றன. தேசிய வேலைவாய்ப்பு மற்றும் குற்றவியல் சட்டவாக்கங்கள் இங்கு மீறப்படுவதை அவர்களின் அனுபவங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. எனினும், நீதியை அணுகுவதில் தொழிலாளர்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதை இந்த ஆய்வு எமக்குக் காண்பிக்கின்றது. ஒரு முறைப்பாடு அல்லது பிணக்கு எழும் போது பயனுறுதி மிக்க ஒரு தீர்வை அடைவதில் காணப்படும் தடைகள், தொழிலாளர் திணைக்கள அல்லது பொலீஸ் போன்ற அதிகாரசபைகளிடம் இருந்து ஆதரவு கிடைக்காமை, அத்துடன் தென் மாகாணத்தில் உள்ள தனியார் தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களில் பயனுறுதி மிக்க அரச மேற்பார்வை அத்துடன் தொழிலாளர் சூழ்நிலைகள் பற்றிய ஒழுங்கபடுத்தல் இன்மை போன்ற இந்தச் சிரமங்களில் உள்ளடங்குகின்றன. தொழிலாளர்கள் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொள்வதை தோட்டங்கள் தடைவிதிப்பதால் மற்றும் அவர்களுக்கு தண்டனைகள் வழங்குவதால், ஒரு தொழிற்சங்கத்தில் இணைதல் அல்லது அதனை ஆரம்பிப்பதன் மூலம் அவர்கள் தமது ஒருங்கிணையும் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகளே காணப்படுகின்றன. அரச மேற்பார்வை இன்மை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கான தடைகள் என்பன கட்டாய வேலை வாங்கல் மற்றும் துஷ்பிரயோகம் மிக்க அத்துடன் சட்டவிரோதமான பணிச் சூழல் என்பவற்றால் மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் அபாயத்தை அதிகரிக்கின்றன.

இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச தொழிலாளர் நியமங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள கடப்பாடுகளுக்க ஏற்புடையதாகக் காணப்படும் பின்வரும் பரிந்துரைகளை சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்துக்கு முன்வைக்கின்றது.

# அரசாங்கத்துக்கான பரிந்துரைகள்

## தொழிலாளர் அமைச்சு

- தனியார் தோட்டங்களில் காணப்படும் கட்டாய வேலை வாங்கல், கடன்பணி அடிமைத்துவம், சிறுவர் தொழிலாளர்கள், பாலியல் தொந்தரவு, மற்றும் ஏனைய உரிமை மீறல்களின் தன்மை மற்றும் அளவினை நிர்ணயிக்க இலக்கு வைக்கப்பட்ட விசேடமான தொழிலாளர் சோதனைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த சோதனை தென் மாகாணத்தில் உள்ள தனியாருக்குச்சொந்தமான தேயிலை தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களில் தொடங்கப்பட வேண்டும், அத்துடன் ஏனைய பெருந்தோட்ட பகுதிகளுக்கு விரிவாக்கப்பட வேண்டும்.
- சோதனைகளின் போது அடையாளம் காணப்பட்ட தண்டனைக் கோவைக்கு உரிய குற்றங்கள் என சந்தேகிக்கப்படும் எந்தவொரு விடயமும் உடனடியாக குற்ற விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக இலங்கை பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் ஆகிய தரப்புகளின் சட்டரீதியான கடமைகளுக்கு இணங்க, அத்தரப்புகளிடம் உடனடியாக ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.
- முத்தரப்பு ஆய்வு, கொள்கை உரையாடல் மற்றும் மேற்பார்வை என்பவற்றை இலகுபடுத்துவதற்காக, சோதனைகளின் கண்டுபிடிப்புகள், பரிந்துரைகள் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள பின்தொடரல் நடவடிக்கைகள் என்பன தேசிய தொழிலாளர் ஆலோசனைப் பேரவைக்கு சமர்பிக்கப்பட வேண்டும்.
- தென் மாகாணத்தில் உள்ள தனியார் தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்கள் தொடர்புடையதாக, தொழிலாளர் திணைக்களத்தின் தொடர்ச்சியான தொழிலாளர் சோதனை செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பாக:
    - அதிக எண்ணிக்கையான சோதனையாளர்கள் பணிக்கமர்த்தப்பட வேண்டும் மற்றும் பயிற்றுவிக்கப்பட வேண்டும்;
    - மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தி, கடன்பணி அடிமைத்துவம் உள்ளடங்கலாக கட்டாய வேலை வாங்கல் தொடர்பாகக் காணப்படும் தண்டனைக் கோவை ஏற்பாடுகள் மற்றும் சர்வதேச நியமங்கள் தொடர்பில் தொழிலாளர் அதிகாரிகளுக்கு பயிற்சியளித்து அவர்கள் தமது சோதனை தொடர் செயன்முறைகளின் போது மீறல்களை அடையாளம் காணக்கூடியவர்களாக ஆக்கப்பட வேண்டும்;
    - அடுத்தடுத்த சோதனைகளுக்கு இடையிலான கால இடைவெளியைக் குறைப்பதுடன் முன்னறிவித்தல் இன்றி மேற்கொள்ளப்படும் சோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கப்பட வேண்டும்; அத்துடன்
    - மேற்குறிப்பிடப்பட்ட சோதனைகளில் பங்கேற்பதற்காக, தென் மாகாணத்தின் தனியார் தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்கள் அமைந்துள்ள பகுதிகளில் செயற்படும் தொழிலாளர் அலுவலகங்களில் போதுமான எண்ணிக்கையில் தமிழ் பேசும் ஆண் மற்றும் பெண் அதிகாரிகள் பணியில் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.
- இலங்கை பொலிஸ், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் ஏனைய தொடர்புடைய அரச முகவரமைப்புகளுடன் தொழிலாளர் அதிகாரிகளும் இணைந்து ஒருங்கிணைக்கப்பட்ட சோதனைகளை முன்னெடுத்தல். குற்றவியல் குற்றங்கள், குழந்தைத் தொழிலாளர் கரிசனைகள், அல்லது துறைகளுக்கு-இடையிலான ஒழுங்குபடுத்தல் பிரச்சினைகள் சாத்தியமாகக் காணப்படும் இடங்களில் குறிப்பாக இவ்வாறான ஒருங்கிணைக்கப்பட்ட சோதனைகள் நடத்தப்பட வேண்டும்.
- கட்டாய வேலை வாங்கல் நடைமுறைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் அத்துடன் பாதுகாப்பை எவ்வாறு அணுகுவது என்பது பற்றி மலையகத் தமிழ்ச் சமூகத்துக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.
- கட்டாய வேலையால பாதிப்படையும் நிலையை உயர்ந்த அளவுகளில் உருவாக்கும், மலையகத் தமிழ்ச் சமூகத்துக்கு எதிராக வேரூன்றிக் காணப்படும் பாரபட்சத்தைக் கருத்திற்கொண்டு, கட்டாய வேலை வாங்கல் பற்றிய ஒரு தேசிய மதிப்பீடு நடத்தப்பட வேண்டும்.
- மாவட்ட தொழிலாளர் அலுவலகங்களில் புகார்களைப் பதிவு செய்வதற்கு மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் போதுமான ஆதரவைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்தல். அங்கு அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் காணப்படும் போது, செலுத்தப்படாத சம்பளம் உட்பட நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் தமது புகார்களை தொழிலாளர் நியாய சபை மற்றும் ஏனைய பிணக்குத் தீர்வு செயன்முறைகளில் முன் கொண்டு செல்வதற்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

- தேயிலை வளர்த்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொழிலில் ஒரு நியாயமான மற்றும் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டிய ஒரு நியாயமான வாழ்வதற்கான சம்பளத்தை இத்துறைக்கான சம்பளச் சபையின் ஆலோசனையுடன் நிர்ணயித்தல். இந்த சம்பளம் போதுமான வாழ்க்கைத் தரநிலையை அணுகக் கூடியதாகவும் கடன் சுழற்சிகளைத் தடுக்கக் கூடியதுமாக அமைந்திருக்க வேண்டும். இந்த சம்பள அளவு காலத்துக்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு, வாழ்க்கைச் செலவு மற்றும் பணவீக்கம் என்பவற்றுக்கு ஏற்ப அதிகரிக்கப்பட வேண்டும்.

- பின்வருவன உள்ளடங்கலாக, தோட்டங்களில் உள்ள மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நன்மைகளுக்கான அணுகலைப் பெறுவதற்கு, இலக்கு வைக்கப்பட்ட படிநிலைகள் எடுக்கப்பட வேண்டும்:

  - தொடர்ச்சியான சோதனைகளின் மூலமாக, மகப்பேறு மற்றும் ஓய்வூதிய நன்மைகளுக்கு அவர்கள் கொண்டுள்ள அணுகல் கண்காணிக்கப்பட வேண்டும்;

  - தென் மாகாணத்தின் தோட்டப் பகுதிகளில் வசிக்கும் அனைத்து தொழிலாளர்களும் EPF மற்றும் ETF இற்கு பதிவு செய்யப்படுதை உறுதி செய்வதற்கு அப்பகுதிகளில் வெளிச்சென்றடையும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடமாடும் நிலையங்களை நடத்துதல். மேலும், நிலுவையில் உள்ள EPF மற்றும் ETF பிரச்சினைகள் தீர்க்கப்படுவது இலகுபடுத்தப்பட வேண்டும்; அத்துடன்

  - நோய்க்கான நன்மைகளைப் பெறுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- பிராந்தியம் மற்றும் துறை அடிப்படையிலான தரவுகள் உள்ளடங்கலாக, சோதனைகள் பற்றிய வகைபிரிக்கப்பட்ட தரவுகளை வருடாந்த அறிக்கைகளின் ஊடாக அளிக்கை செய்தல். இதில், உள்ளடக்கப்பட்ட தனியார் தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்கள், அத்துடன் நன்மைகளைப் பெற்றுக்கொண்ட மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை என்பன குறிப்பாக உள்ளடக்கப்பட வேண்டும்.

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

- தொழிலாளர் திணைக்களத்தின் பரிந்துரைகளைத் பின் தொடர்ந்து அல்லது தமது சொந்த அதிகாரத்தின் அடிப்படையில், எந்தவொரு சந்தேகத்திற்கிடமான கட்டாய வேலைவாங்கல், கடன்பணி அடிமைத்துவம், சிறுவர் தொழிலாளர்கள், உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் அல்லது பிற குற்றவியல் துஷ்பிரயோகங்கள் குறித்து இலங்கை பொலிசார் உடனடி குற்றவியல் விசாரணைகளைத் தொடங்குவது உறுதி செய்யப்பட வேண்டும்.

- தோட்டப் பிரதேசங்களைச் சூழ்ந்து பணி புரியும் பொலிஸ் அதிகாரிகளிடம் கட்டாய வேலைவாங்கல் தொடர்பான மீறல்களை அடையாளம் காண்பதற்கு தேவைப்படும் அறிவு மற்றும் திறன்கள் காணப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

- மலையகத் தமிழ்ச் சமூகத்தில் இருந்து பொலிஸ் அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும்.

- கட்டாய வேலை வாங்கல் தொடர்பில் பொருத்தமான தண்டனைக் கோவை ஏற்பாடுகளின் கீழ் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதற்கு சட்டமா அதிபர் அலுவலகத்தில் இருந்து ஆதரவைப் பெற்றுக்கொள்ளுமாறு பொலிசாருக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

- தனியார் தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களைச் சூழ்ந்து காணப்படும் பொலிஸ் நிலையங்களில், தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பான புகார்களைப் பெற்றுகொள்வதற்காக ஒரு விசேட பணிமனை உருவாக்கப்பட வேண்டும்.

## பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு மற்றும் வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

- தென் மாகாணத்தில் உள்ள மலையகத் தமிழ்த் தொளிலாளர்களுக்கு, வசிக்கும் காலப் பாதுகாப்ப வழங்கப்பட்ட அரச வீடமைப்புத் திட்டங்களின் ஊடாக போதுமான வீட்டு வசதியை வழங்குவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- போதுமான வதிவிட வசதி, காணி, துப்புரவு வசதிகள், கல்வி, மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகளை மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் அணுகுவதில் காணப்படும் தடைகளை அடையாளம் காண மற்றும் நிவர்த்தி செய்ய தொடர்புடைய அரச அதிகார சபைகள் முன்யோசனை மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது உறுதி

செய்யப்பட வேண்டும். இதில் உள்ளூர் மட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் தொழிலாளர்களைச் சென்றடைதல் மற்றும் கண்காணிப்பு என்பனவும் உள்ளடங்குகின்றன.

- அனைத்து கட்டாய வெளியேற்றல்களும் தடை செய்யப்பட வேண்டும் அத்துடன் வெளியேற்றப்படலைத் தொடர்ந்து எவரும் வதிவிடம் இல்லாத நிலையில் இருக்காதது உறுதி செய்யப்பட வேண்டும்.

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு

- தற்போதுள்ள சட்டங்களில் உள்ளடக்கப்படாத தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்களையும் உள்ளடக்கியதாக, தோட்டத் தொழிலாளர்களின் பணிச் சூழ்நிலைகள் மற்றும் நலன்புரி தொடர்பான பாதுகாப்பை வழங்கும் வகையில் ஒரு விரிவான சட்டம் இயற்றப்பட வேண்டும்.

- கடன்பணி அடிமைத்தின் வரைவிலக்கணம் சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடையதாக காணப்படுவது உறுதி செய்யப்படுவதுடன் அது அமுல்படுத்தப்பட வேண்டும். கட்டாய வேலை வாங்கலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக காணப்படும் ஏனைய அனைத்து சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு ஏற்புடையனவாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

- சட்டத்தால் விதிக்கப்படும் தண்டனைகள் கண்டிப்பாக அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்ய, குற்றவியல் சட்டநடவடிக்கைகள் மற்றும் பொருத்தமான சிவில் சட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப்பட வேண்டும்.

- இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆதரவுடன், மலையகத் தமிழ்ச் சமூகத்துக்கு நீதிமன்றங்கள் மற்றும் நியாய சபைகள் உள்ளடங்கலாக நீதி முறைமைக்கு சமமான அணுகல் கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

- தொழிலாளர் திணைக்களம் மற்றும் இலங்கை பொலிசார் உள்ளடங்கலாக தொடர்புடைய அனைத்து அரச அமைப்புகள் மற்றும் திணைக்களங்களும் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள சமத்துவத்துக்கான உத்தரவாதத்தை விளங்கிக் கொண்டு பிரயோகம் செய்வது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான இலங்கையின் கடப்பாடுகளுக்கு ஏற்புடையதாக அமைந்திருக்க வேண்டும். மேலும், சாதி, இனம், பால்நிலை, மொழி மற்றும் சமூகப் பொருளாதார நிலை என்பவற்றின் அடிப்படையில் அமைந்த பாரபட்சங்கள் உள்ளடங்கலாக ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்ட பாரபட்சங்களில் இருந்து மலையகத் தமிழ் சமூகம் முழுமையான பாதுகாப்பு பெறுவதை உறுதி செய்யும் விதத்தில் அமைந்திருக்க வேண்டும்.

- பாரபட்சத்துக்கு எதிராக ஒரு விரிவான சட்டத்தை இயற்றுவதன் மூலம், மலையகத் தமிழ்ச் சமூகங்களைப் பாதிக்கும் கட்டமைப்பு ரீதியான மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்ட பாரபட்சங்களை அகற்றுவதற்கான முன்யோசனை மிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

## வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு

- தொழிலாளர் சோதனை (விவசாயம்) சமவாயம், 1969 (இல. 129); சமூகப் பாதுகாப்பு (ஆகக் குறைந்த நியமங்கள்) சமவாயம், 1952 (இல. 1020; தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் சமவாயம், 1981 (இல. 155); மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பு சமவாயம், 2006 (இல. 187) ஆகிய சமவாயங்கள் ஏற்றுறுதி செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும்.

## மனித உரிமைகள் ஆணைக்குழு

- மூன்றாம் தரப்பினரின் மனித உரிமை மீறல்களிலிருந்து தனிநபர்களைப் பாதுகாப்பதற்கான அரசின் கடமையின் அடிப்படையில், தனியார் செயற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களையும் உள்ளடக்கும் வகையில், ஆணைக்குழுவின் பணிப்பாணையை விரிவாக்குவதன் மூலம் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படும் மீறல்களை விசாரணை செய்வதற்காக ஒரு உண்மையைக் கண்டறியும் செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும்.

- உண்மையைக் கண்டறியும் செயற்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை வெளியிடுவதுடன் தேவையான பின் தொடரல் செயற்பாடுகளும் பரிந்துரை செய்யப்பட வேண்டும்.